

முன்னாள் அமைச்சரும், முன்னாள் விருதுநகர் மாவட்டச் செயலாளருமான வே.தங்கப்பாண்டியன் அவர்களின் 26ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மல்லாங்கிணரில் உள்ள அவரது நினைவிடத்தில், தமிழ்நாடு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், செள.தங்கப்பாண்டியன், காதர்பாட்சா முத்துராமலிங்கம், மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் வனராஜா, தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை அமைப்பாளர் பாலா, கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஆகியோர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

பா.ஜ.க.வின் குஜராத் மாடல் லட்சணம்!

# குஜராத் மக்களே புற்றுநோயால் அதிகளவில் பாதிப்பு!

## போதை பொருட்கள் - மருத்துவ வசதியின்மையே காரணம்!

புதுடெல்லி, ஆக. 1-

25 ஆண்டுகளுக்கும் மேலாக பா.ஜ.க. ஆட்சி செய்து வரும் குஜராத் மாநிலத்தில் அதிகளவிலான மக்கள் புற்று நோய் மற்றும் காச நோயாளர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர்.

இதுகுறித்து ஜூலை 28 அன்று மக்களவையில் பா.ஜ.க. எம்.பி., நிஹால் மேச்வால் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு ஒன்றிய சுகாதாரம்குடும்ப நலத்துறை அமைச்சகம் அளித்த புற்று நோயாளர்கள் பற்றிய தகவல்களின் படி, பா.ஜ.க. நீண்ட காலம் ஆட்சி நடத்தி வரும் குஜராத் மாநிலத்தின் உண்மை நிலவரம் அம்பலமாகியுள்ளது. குஜராத் மாநில மக்களே புற்றுநோய் மற்றும் காச நோயால் அதிகளவில் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

குறிப்பாக கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. இந்தியா முழுவதும் கடந்த சில ஆண்டுகளாகவே புற்றுநோய் பாதிப்பு அதிகரித்து வருகிறது.2020 ஆம் ஆண்டு 13,92,179 நபர்களும், 2021 ஆம் ஆண்டு 14,26,447 நபர்களும், 2022 ஆம் ஆண்டு 14,61,427 நபர்களும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டனர்.

குஜராத்தில் மட்டும் 2020 ஆம் ஆண்டு 73,382 நபர்கள், 2021 ஆம் ஆண்டு 71,507 நபர்கள் மற்றும் 2021 ஆம் ஆண்டு 69,660 நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் அதிகளவு பாதிக்கப்பட்டது பெண்கள் என்பது தெரிய வந்துள்ளது. இதே போல குஜராத் மாநிலத்தில் 2020 ஆம் ஆண்டு 1,20,560 நபர்கள் காச நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டு 1,51,912 ஆக உயர்ந்துள்ளது.

குறிப்பாக இந்த ஆண்டில் இது வரை 60,585 நபர்கள் காச நோயால் பாதிக்கப்பட்டு 3,190 நபர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் கடந்த ஏழு ஆண்டுகளாக 20 முதல் 40 வயதிற்குட்பட்ட இளைஞர்களே புற்று நோயால் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது அபாயகரமான சூழல் நிலவுவதை காட்டுகிறது.

மோசமான வாழ்க்கைச் சூழல், சுற்றுச்சூழல் மாசுபாடு ஆகியவையே அதிகளவிலான பாதிப்பிற்கு காரணம் என மருத்துவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இதற்கு பின்புலத்தில் அதிகப்படியான போதை பொருட்கள் பயன்பாடு இருக்கும் என்றும் கூறப்படுகிறது. ஏனெனில் வெளிநாடுகளில் இருந்து போதைப் பொருட்கள் இந்தியாவிற்கு கடத்தி வரப்பட்டு, குஜராத்தில் அதானியின் முந்த்ரா துறைமுகம் மூலமாக நாட்டிற்குள் கொண்டுவரப்படுவதாக பல்வேறு தரப்பினர் கூறுகின்றனர். அதிகளவிலான ஆண்கள் வாய்ப்புற்று நோயாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். புற்றுநோயாலும் காசநோயாலும் மக்கள் அதிகளவு பாதிக்கப்பட்டாலும் அவர்களுக்கு முறையான மருத்துவ வசதிகள், மறுவாழ்வு மையங்கள் என எதையும் பா.ஜ.க. அரசு செய்யவில்லை. இந்த செய்திகள் மற்றும் ஒன்றிய அரசின் பதில்களே மூலம் மக்களின் சுகாதாரத்தைப் பற்றி கொஞ்சம் கூட கவலைப்படாத பா.ஜ.க.வின் குஜராத் மாடல் லட்சணம் அம்பலமாகியுள்ளது.

இணையதள குற்றப்பிரிவு தலைமையகத்தில் ரூ.9.28 கோடியில்

# அழைப்பு மைய கட்டுப்பாட்டு அறை விரிவாக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக.1-

இணையதள குற்றப்பிரிவு தலைமையகத்திலுள்ள 1930 அழைப்புமையம் கட்டுப்பாட்டு அறை ரூ.9.28 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இணையதள குற்றங்கள் குறித்த அழைப்புகள் பெருகி வரும் நிலையில் ஏற்கனவே உள்ள அழைப்பு மையம் / கட்டுப்பாட்டு அறை விரிவாக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது. அதன்படி இம்மையத்தில் உள்ள 8 இருக்கைகள் இருக்கைகளாகவும், புதியதாக கூடுதல் 15 பணியாளர்களை (மூன்றாண்டுகளுக்கு ரூபாய் 928.57 இலட்சம்) ஒப்பளிப்பு செய்யவும். முதற்கட்டமாக இந்தாண்டிற்கு 310 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2023-24ஆம் ஆண்டிற்கான காவல்துறை மானியக் கோரிக்கையின் போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், இணையதள குற்றப்பிரிவு தலைமையகத்திலுள்ள 1930 அழைப்பு மையம் / கட்டுப்பாட்டு அறையை 15 இருக்கைகள் கொண்ட மையமாக விரிவாக்கம் செய்திட 928.57 இலட்சம் ரூபாய்க்கு நிர்வாக அனுமதி அளித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். இதன்மூலம் இணையதள பொருளாதார குற்றங்கள், மோசடிகள் போன்ற குற்றங்களில் ஈடுபடும் நபர்களை விரைவாக வங்கி கண்டறிந்து, மோசடி நபர்களிடமிருந்து பணத்தை இழந்தவர்களுக்கு பணத்தை மீட்டெடுக்க உதவிடவும், பிற இணையதள குற்றங்களிலிருந்து மக்களை காத்திடவும் இவ்விரிவாக்கம் செய்யப்பட்ட 1930 அழைப்பு மையம்/ கட்டுப்பாட்டு அறை பெரிதும் உதவும்.

ஒன்றிய அரசின் மோசமான நிலை அம்பலமாவதால்

# தரவுகளை அழிக்கும் பணியில் பா.ஜ.க. அரசு ஈடுபடுகிறது!

## எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக. 1-

மக்கள் நலத் திட்டங்களை முறையாக நிறைவேற்றுவதில் புள்ளிவிவரங்களின் பங்கு மிக முக்கியமானதாகும். புள்ளி விவரங்கள் அடிப்படையிலேயே வளர்ச்சியில் உள்ள இடைவெளியைக் கண்டறிந்து முறைப்படி திட்டங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்க்க முடியும். ஆனால் பா.ஜ.க. ஆட்சியில் இந்த புள்ளி விவரங்கள் எதுவும் முறையாக பராமரிக்கப்படுவதில்லை. ஆட்சிக்கு வந்த முதல் ஐந்து ஆண்டுகளிலேயே பிரதமர் மோடியின் வெளிநாட்டுப் பயணத்திற்கு அவர்கள் செல விட்ட பயணச் செலவுகளின் விவரங்கள் பெரும் கேள்விகளை எழுப்பியது.

அதனை தொடர்ந்து பா.ஜ.க. அரசு தொடர்ச்சியாக புள்ளிவிவரங்களை கைவிடத் துவங்கியது. பல நேரங்களில் எதிர்க்கட்சிகளின் கேள்விக்கு புள்ளி விவரங்கள் இல்லை என்று கைவிரிக்கத் துவங்கியது. இதனாலேயே ‘தரவுகள் இல்லாத அரசு (No data available government)’ என்று எதிர்க்கட்சிகள் கடுமையான விமர்சனத்தை முன்வைத்தன. ஆனால் தற்போது தரவுகளை அழிப் பதில் பா.ஜ.க. அரசு கவனத்தை செலுத்தி வருகிறது என்பது தெரிய வந்துள்ளது.

இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக தான் தற்போது மக்கள் தொகை அறிவியலுக்கான சர்வதேச நிறுவன (IIPS) இயக்குனர் கே.எஸ். ஜேம்ஸை அவர் தலைமையில் நடக்கும் ஆய்வுகளில் வரும் புள்ளி விவரங்கள் திருப்திகரமாக இல்லை என்று கூறி அவரை இடைநீக்கம் செய்துள்ளது. உண்மையில் பா.ஜ.க. அரசின் குறைகளை புள்ளி விவரங்கள் மூலம் அம்பலப்படுத்தியதாலேயே அவரை இடைநீக்கம் செய்துள்ளது அரசு. குறிப்பாக பா.ஜ.க. 2019 ஆம் ஆண்டு திறந்த வெளி மலம் கழித்தல் இல்லாத இந்தியாவை உருவாக்குவோம் என்ற வாக்கு றுதியைக் கொடுத்து அதை விளம்பரப் படுத்துவதற்காக பல ஆயிரம் கோடி ரூபாய்களை செலவு செய்து வந்தது. அந்த திட்டம் வெற்றி பெறவில்லை மேலும் மக்கள் நல நோக்கில் அது செயல்படுத்தப்படவில்லை. அந்த திட்டத் தின் மூலமாக பல ஆயிரம் கோடி ரூபாய் வீணடிக்கப் பட்டன என நாடு முழுவதும் பரபரப்பாக பேசப்பட்டது. இந்த பரபரப்பிற்கு அடித்தளமிட்டது தேசிய குடும்ப நல ஆய்வு (NFHS 5) வெளியிட்ட தரவுகள் ஆகும். இந்தியா முழுவதும் 19 சதவீதமான குடும்பங்கள் திறந்த வெளியில் மலம் கழிக்கும் நிலையில் தான் உள்ளார்கள் என்பதை அது அம்பலப்படுத்தியது. இந்த ஆய்வு மோடி அரசின் போலித்தனத்தை அம்பலப்படுத்தியது.

மேலும் 2018 ஆம் ஆண்டு போஷன் அபியான் என்ற திட்டத்தை மோடி அரசு அறிமுகப்படுத்தியது. இந்த திட்டத் தின் நோக்கம் குழந்தைகளுக்கான ஊட்டச்சத்தை அதிகரித்து ஆண்டு தோறும் ரத்த சோகையை 3 புள்ளிகளாக குறைப்பதே. ஆனால் தேசிய குடும்பநல ஆய்வு 4 (2015-2016) எடுக்கப்பட்ட போது இருந்த ஊட்டச்சத்து குறைபாட்டை விட, ஆய்வு 5 ல் அதிகளவிலான குழந்தைகள் பாதிக்கப்பட்டு இருப்பதை அம்பலப்படுத்தியது. இது போன்று பல்வேறு தரவுகள் மக்களின் புருவங்களை உயர்த்த வைத்தது. திட்டங்களுக்கு பா.ஜ.க. அரசு ஒதுக்கீடு செய்த பல ஆயிரம் கோடி ரூபாய்களில் ஊழல் நடந்துள்ளது குறித்தான கேள்விகள் எழ துவங்கின.

இதன் காரணமாகவே 2019 ஆம் ஆண்டு வேலையின்மை குறித்தான தரவுகளை வெளியிடாமல் முடக்கி வைத்தது. அதுமட்டுமல்ல, வரும் நாட்களில் நடைபெற இருக்கும் தேசிய குடும்ப நல ஆய்வில் ரத்த சோகை குறித்தான விவரங்களை இணைக்க அனுமதிக்கவில்லை.தான் எடுக்கும் புள்ளி விவரங்களே தனது ஆட்சியின் மோசமான நிலையை அம்பலப்படுத்தி விடுவதால் அந்த பணியை ஒட்டுமொத்தமாக முடக்கும் பொருட்டே, கே.எஸ். ஜேம்ஸை இடைநீக்கம் செய்துள்ளது என்ற விமர்சனம் எழுந்துள்ளது.

**கண்டனம்!**

சுகாதாரத்துறையின் முக்கிய அதிகாரியான கே.எஸ்.ஜேம்ஸ் இடைநீக்கம் செய்யப்பட்டது முற்றிலும் அரசியல் உள்நோக்கம் கொண்டது என மோடி அரசுக்கு கேரள முன்னாள் நிதி அமைச்சர் டாக்டர் டி.எம்.தாமஸ் ஐசக் விமர்சித்துள்ளார். “உங்கள் முகம் விகாரமாகத் தெரிந்தால் கண்ணாடியை குற்றம் சாட்டுங்கள். அதைத்தான் மோடி செய்து கொண்டிருக்கிறார். 19% பேர் திறந்த வெளியை இன்னும் கழிப்பிடமாக பயன்படுத்துகின்றனர். 40% பேருக்கு சுத்தமான சமையல் எரிபொருள் கிடைக்க வில்லை. ரத்த சோகை அதிகரிப்பு என ஆய்வு விவரங்களை தேசிய சுகாதார குடும்ப ஆய்வறிக்கை வெளியிட்டது. அந்த ஆய்வை வெளியிட்ட அமைப்பின் இயக்குநர் தான் கே.எஸ்.ஜேம்ஸ். அதற்காகத்தான் அவர் பழிவாங்கப்பட்டுள்ளார்” என தாமஸ் ஐசக் கூறியுள்ளார்.


**தமிழ்நாடு கனிம நிறுவனம்**

எண்.31, காமராஜர் சாலை, சேப்பாக்கம், சென்னை-600005.
தொலைபேசி: 044-29862018, 28511972

இ-ஒப்பந்தப்புள்ளி அழைப்பதற்கான – அறிவிப்பு

| | | | |
|---|---|---|---|
| 1 | ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் விபரம் | டாமின், எண்ணூர், தரமணல், தொழிற்சாலைக்கு சணல் கோணிபைகள் கொள்முதல் செய்தல் | எலிகரடு பகுதி-II மேல்பிரிவு குவாரியில் கற்துண்டங்களை பிரித்தெடுத்தல் மற்றும் உற்பத்தி செய்தல் |
| 2 | ஒப்பந்தப்புள்ளி கோப்பு எண் / தேதி | **1046/IU-1/2023,** நாள்.25.07.2023 | **1083/P2/20203,** நாள்.27.07.2023 |
| 3 | ஒப்பந்தப்புள்ளி ID எண். | **2023_TNMIN_352082_1** | **2023_TNMIN_325152_1** |
| 4 | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் | 16.08.2023, மாலை 05.00 மணி | 16.08.2023, மாலை 5.00 மணி |
| 5 | தொழில்நுட்ப உறை திறக்கும் நாள் | 18.08.2023, மாலை 04.00 மணி | 18.08.2023, மாலை 04.00 மணி |
| 6 | ஒப்பந்தப்புள்ளி படிவத் தொகை / EMD இணைய வழியாக செலுத்த வேண்டும் | ரூ.1,000/-<br>ரூ.69,600/- | ரூ.1,000/-<br>ரூ.59,000/- வகை (System) ஒன்றுக்கு |

குறிப்பு: மேலும், விபரங்களுக்கு Tamil Nadu e-Tendering portal https://tntenders.gov.in / www.tamingranites.com என்ற இணையதளத்தினை பார்வையிடவும்

செ.ம.தொ.இ./4174/ஒப்பந்தப்புள்ளி/2023

பொதுமேலாளர்(நிதி)

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"


ஆதிதிராவிடர் துணைத் திட்டத்தின்

# நிதியை பிற திட்டங்களுக்கு பயன்படுத்துவதாக கூறுவது முற்றிலும் தவறானது!

## ஆதிதிராவிடர் நலத் துறை விளக்க அளிக்கை!

சென்னை, ஆக.1 -

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை செயல்படுத்த ஆதிதிராவிடர் துணைத் திட்டங்களின் நிதியை பயன்படுத்தியுள்ளதாக தவறான தகவல்கள் வெளியாகியுள்ளன என்றும் ஆதிதிராவிடர் துணைத் திட்டங்களின் நிதியை பிற திட்டங்களுக்கு பயன்படுத்துவதாக கூறுவது தவறானது மற்றும் உண்மைக்குப் புறம்பானது என்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து அத்துறை வெளியிட்டுள்ள விளக்க அறிக்கை வருமாறு :-

கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தை செயல்படுத்த ஆதிதிராவிடர் துணைத் திட்டங்களின் நிதியை பயன்படுத்தியுள்ளதாக தேசிய பட்டியல் இனத்தினருக்கான ஆணையத்தில் ஒரு தனிநபர் புகார் அளித்துள்ளதாக அண்மையில் ஊடகங்களில் சில செய்திகள் வெளிவந்துள்ளன. ஆதிதிராவிடர் துணைத் திட்டம் மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடு முறையைப் பற்றிய தவறான புரிதலின் காரணமாக தான் இந்த புகாரும், அதனை பற்றிய செய்திகளும் எழுந்துள்ளன.

பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் பயன்கள், பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு, அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப கிடைப்பதை உறுதி செய்வதே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்களின் நோக்கமாகும். இந்தத் திட்டங்களின் கீழ் இப்பிரிவு மக்கள் மட்டுமே பயன்பெறத்தக்க திட்டங்களும், பொதுத் திட்டங்களின் கீழ் இப்பிரிவு மக்கள் பயன்பெறும் திட்டங்களும் உள்ளன. இந்த முறையின்படி, பொதுத் திட்டத்தின் ஒட்டுமொத்த ஒதுக்கீட்டில், பட்டியலின மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய பயன்களுக்கு நிதி தனியாக ஒரு தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிறது. இத்தலைப்பின் கீழ் ஒதுக்கப்படும் நிதியை அப்பிரிவு மக்களுக்கு மட்டுமே செலவிட இயலும். இந்தத் தனி ஒதுக்கீடு முறையை தான் ஒன்றிய அரசும், பிற மாநிலங்களும் பின்பற்றுகின்றன. ஒன்றிய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம், இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதிய திட்டம், பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டம் (நகர்ப்புரம்), அனைவருக்கும் கல்வி இயக்கம், தேசிய சுகாதார இயக்கம் மற்றும் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) போன்ற முக்கிய திட்டங்களுக்கு இந்த முறையில் தான் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது.

திட்டத்தின் பெயர் - ஒட்டுமொத்த ஒதுக்கீடு வரவு செலவு திட்டம், மொத்த ஒதுக்கீட்டில் ஆதிதிராவிடருக்கான ஒதுக்கீடு வருமாறு:-

வ.எண்

திட்டத்தின் பெயர்

ஒட்டுமொத்த ஒதுக்கீடு (வரவு செலவு திட்டம்)

மொத்த ஒதுக்கீட்டில் ஆதி திராவிடருக்கான ஒதுக்கீடு

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் 60,000 கோடி, ஆதிதிராவிடருக்கானது 10,500 கோடி, இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதிய திட்டம் 6,634 கோடி, 1,296 கோடி, பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டம் (நகர்ப்புரம்) - 25,103 கோடி, 4,162 கோடி, அனைவருக்கும் கல்வி இயக்கம் 37,453 கோடி, 7,535 கோடி, தேசிய சுகாதார இயக்கம் 22,095 கோடி ரூபாய், 4,518 கோடி ரூபாய், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) 7,192 கோடி ரூபாய், 1,355 கோடி (ரூ கோடியில்)

தகவல்கள் ஒன்றிய அரசின் வரவு செலவு திட்டத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

இதுபோன்றே, தமிழ்நாடு அரசு நிதியிலிருந்து செயல்படுத்தப்படும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் மற்றும் இலவச சீருடை போன்ற மாநில அரசின் திட்டங்களுக்கும் இதே முறையில் தான் பட்டியலினத்தவருக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**ரூ.17,076 .கோடி நிதி ஒதுக்கீடு!**

இதே போல் தான் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்திற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2023-24 வரவு செலவு திட்டத்தில் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 7000 கோடி ரூபாயில், பட்டியல் இனத்தவர்க்கென 1,540 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மாநில அரசு செயல்படுத்தும் இந்த மகத்தான புதிய திட்டத்தில் பட்டியலினத்தவர் விடுபடாமல், திட்டத்தின் பயன்கள் அவர்களுக்கு சென்றடைவதை உறுதி செய்ய, திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில், பட்டியலினத்தவருக்கென தனியாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, ஒதுக்கப்பட்ட 1,540 கோடி ரூபாயை பட்டியலினத்தவருக்கு மட்டும் தான் செலவிட இயலும். இது மட்டுமன்றி, கடந்த 2020-21 ஆம் ஆண்டு 13,680 கோடி ரூபாயாக இருந்த பட்டியலின மக்களுக்கு பயனளிக்கக் கூடிய ஆதி திராவிடர் துணைத் திட்டங்களுக்கான ஒதுக்கீடு, 2023-24 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 17,076 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

சமூக நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை அடித்தளமாக கொண்டுள்ள இந்த அரசு, பட்டியலினத்தவரின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு புதிய திட்டங்களை கொண்டு வந்துள்ளது. பட்டியலினத்தவர் / பழங்குடியின தொழில் முனைவோர்களின் பொருளாதார மேம்பாட்டை ஊக்குவிக்க ‘அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம்’ 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் தொடங்கப்பட்டுள்ளது. ஊரக மற்றும் நகர்புர பகுதிகளில் அடிப்படை வசதிகளை உறுதி செய்ய, 5 ஆண்டுகளில் 1000 கோடி ரூபாய் ஒட்டுமொத்த ஒதுக்கீட்டுடன், ‘அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்’ அறிவிக்கப்பட்டுள்ளது. பட்டியலினத்தவர் / பழங்குடியின சமூகத்தினரின் புத்தொழில்களில் முதலீட்டு செய்வதற்கு, ‘தமிழ்நாடு ஆதி திராவிடர் / பழங்குடியினர் புத்தொழில் நிதி’ 50 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் இந்த ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டங்கள் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினரிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

மேலும், இவ்வாண்டு சட்டமன்றத்தில் பட்ஜெட் கூட்டத் தொடரின் போது, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்களின் நிதியை சிறப்பாக செயல்படுத்திட ஒரு சிறப்பு சட்டம் இயற்றப்படும் என அரசு அறிவித்துள்ளது. இதற்கென பல்வேறு தரப்பினருடன் கலந்தாலோசனைகள் நடைபெற்று வருகின்றன. பட்டியல் இன மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக, இச்சட்டம் மிக விரைவில் நிறைவேற்றப்படும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் செலவினத்தை சிறப்பாக கண்காணிக்க நிதி துறையில் ஒரு சிறப்பு பிரிவும் உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே, ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின் நிதியை பிற திட்டங்களுக்காக பயன்படுத்தபடுகிறது என்ற குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது மற்றும் உண்மைக்கு புறம்பானது. பட்டியலினத்தவரின் நலன் மற்றும் சமூக பொருளாதார முன்னேற்றத்தில் இந்த அரசு உறுதியாக உள்ளது. பல்வேறு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகின்ற இவ்வரசு இந்த நோக்கங்களை அடைய தொடர்ந்து செயல்படும்.

இவ்வாறு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சென்னை – செங்கற்பட்டு – காஞ்சிபுரம் – திருவள்ளூர் – வேலூர் – திருவண்ணாமலை – விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள பேரவை நிர்வாகிகள் – செயற்குழு – மாவட்ட கவுன்சில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்

## தொ.மு.ச.பேரவை அறிவிப்பு

மத்திய தொழிற்சங்க அமைப்புகள், தொழில்வாரியான தொழிற்சங்க அமைப்புகள், இதர தொழிலாளர் அமைப்புகள் ஜனவரி 30 அன்று தலைநகர் புதுடெல்லியில் கூடி எடுத்த முடிவின் அடிப்படையில், ஒன்றிய பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத – ஜனநாயக விரோத – தொழிலாளர் விரோத போக்குகளைக் கண்டித்து **ஆகஸ்ட் 9 அன்று மாநிலத் தலைநகரங்களில் “பெருந்திரள் அமர்வு”** நடத்துவதென எடுக்கப்பட்ட முடிவினை நடைமுறைப்படுத்திட **சென்னை, செங்கற்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம்** மற்றும் **கடலூர் மாவட்டங்களில் உள்ள பேரவை நிர்வாகிகள், பேரவைச் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட கவுன்சில் தலைவர், செயலாளர், பொருளாளர்** ஆகியோர் கலந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டம் சென்னை **தொ.மு.ச. பேரவை தலைமையகமான “கலைஞரகத்தில்” 02.08.2023** அன்று காலை **10 மணியளவில்** பேரவைப் பொருளாளர் **திரு. கி.நடராசன்** அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: **“ஆகஸ்ட் 9 பெருந்திரள் அமர்வு”**

**மு.சண்முகம்,** எம்.பி.
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை

# சென்னை கிழக்கு மாவட்டக் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!



மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

**சென்னை கிழக்கு மாவட்டக் கழக சார்பு அணிகளின் ஆலோசனைக் கூட்டம் இன்று ( 01-08-2023 செவ்வாய்கிழமை) காலை 9.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, எண்.7. செல்லப்பா தெரு என்ற முகவரியில் நடைபெறுகிறது.**

**இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.**

**பொருள்: ஆகஸ்ட்.7.முத்தமிழறிஞர் நினைவு நாள்.**

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.



தலைமை கழகத்தால் அறிவித்துள்ள திருவள்ளூர் மத்திய மாவட்ட மாணவரணி நிர்வாகிகள் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ வை மாநில மாணவரணி இணைச் செயலாளர் பூவை சி.ஜெரால்டு முன்னிலையில் மாவட்ட அமைப்பாளர் வே.தியாகராஜன், துணை அமைப்பாளர்கள் பா.புருஷோத்தமன், வி.அபிராமி, அ.விக்டர் மோகன், சந்தோஷ்குமார், மு.சரத்குமார் ஆகியோர் சந்தித்து வாழ்த்து பெற்றனர்கள்.




சென்னை, பல்லாவரம் பேருந்து நிலையத்தில் 7வது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆடவர் ஹாக்கிப் போட்டிக்கான வெற்றி கோப்பையை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அறிமுகம் செய்தார். அப்போது, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மேயர் திருமதி.வசந்தகுமாரி கமலகண்ணன், செங்கல்பட்டு உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆனந்த் குமார் சிங், தாம்பரம் நகராட்சி ஆணையர் அழகுமீனா, செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சுபாநந்தினி மற்றும் பலர் உடனிருந்தனர்.